Registered


# சன்மார்க்கபோதினி.

# SANMARKAPOTHINI.

பத்திரவிலைவிகிதம்

[illegible]க்கு ரூபா ௧ சதம் ௨௫ தபாற்செலவு.
இலங்கைக்குசதம் ௫௦
இந்தியாவுக்குசதம் ௫௦
பிறதேசங்களுக்கு ௭௫

ஒன்றுவிட்டொருசனிக்கிழமைகளிற்பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

விளம்பரவிலைவிகிதம்

வரி ஒன்றுக்குச் சதம்௧௦ ௧௦ க்குமேல்வரி ௧-க்கு௮ ௫௦ க்குமேல்..........௬ இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும் ௬-ல் ஒன்று

XXVI. Jaffna 20th August 1910 No 17

௨௬ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௦ ம் ௵ ஆவணிமீ ௨௦௨ சனிக்கிழமை. சங்கியை ௧௭


## சன்மார்க்கமெங்கே?

நந்தேயத்தில் வரவரச் சன்மார்க்கங் குன்றித் துன்மார்க்கம் பெருகிவரக்கண்டு துக்கிக்கிறோம். யாவரும் ஞானம்பேசுவார்கள், ஆனால் "படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோயில்" என்றவாறே அவர் ஞானமுமிருக்கும். இவர்கள் சுடலைஞானிகளன்றி முற்றத்துறந்த ஞானிகளல்ல. சுடுகாடுசென்றவுடனே காமும்பபடி யொருநாளைக்காவோமென்றுணர்ந்தவுடன் ஞானம் உதிக்கும். வழியில்வரும்போதே அதைமறந்து, அவனைக் கருவறுக்க, இவனைக்கெடுக்க, அவன் எல்லையை அரக்க,, இவன்காணியைப்பிடிக்க எண்ணிக்கொண்டே வருவார்கள். இதைத்தான் "சுடலைஞான"மென்பது. சுடலைஞானம் அத்தருணத்துக்காயினும் மனதில் தம்மரண நிச்சயத்தை நன்குணர்ந்து இவ்வுலகபற்றொழிந்து உதிக்கும் ஞானம். அந்தஞானம் தன்னெடுநாட்பயிற்சியாலும் பேராசையாலும் காய்மகாரத்தினாலும் அழிந்துபோனதேயன்றி அந்நேரத்தில் உதித்தது உண்மையான ஞானமாதலால் ஒருவாறு அது உத்தமமானது. ஆனால் கள்ளஞானமோ மகாதீது, "காதிலே குண்டலங்கள் கழுத்திலேசெபமாலை கையின்மாரின், மீதிலேதாள்வடங்கள் மனதிலே கரவடமாய் வேஷம்பூண்டோர், வாதிலேயருள்புரியுந் தண்டலையாரேசொன்னேன் மனிதர்காணும், போதிலேமவுனியிராப் போதலேருத்திராட்சப்பூனைதானே." என்றாற்போல வெளிவேஷ ஞானம்பேசி அந்தரங்கத்தில் துன்மார்க்க கிரியைசெய்து சீவிப்பவரே கள்ளஞானிகள்.

இவர்போலியர் தங் கல்வித்திறத்தாலும் வாய்ச்சாமர்த்தியத்தினாலும் தம்மைப் பிறரறியாவண்ணம் மூடிக்கொண்டாலும் சற்றில் சில நுண்ணறிவாளர்க்காயினும் இவர்வேஷம் வெளியாய்விடுகிறது. தாம் லோகோபகாரியென்றும் சனோபகாரியென்றும் பெயர்பூண்டு, பலரிடம்பொருளீட்டித் தர்மஸ்தாபனம் செய்த பலரின் நோக்கம் பின்னுக்கு வெளிவந்ததை நாமறிவோம். தற்காலத்தில் உள்ளபடி சன்மார்க்கத்தை நிலைநாட்ட உண்மையான கடவுட்பத்தியுடன் பிரயாசப்படுபவர் அரிது. தன் சுயநயத்தை விரும்பாவிடினும் தம் கீர்த்தியையாவது விரும்பியே யிவ்வித வெளிவேஷம்போடுவார் நந்தேசத்தில் அனேகர். அவர் எவ்விதவேஷம்போடினும், அவர்செய்த, அல்லது செய்யும், அல்லது செய்யவிருக்கும் துன்மார்க்ககிரியை மறையுமா? பூமாதேவிமறைக்காள் எல்லாம் உள்ள உள்ளபடியே வெளிப்படும். எவ்வகைக் கடவுட்பத்தியும் ஆலயவழிபாடுமற்றும் தாம் ஓர பக்தனைப்போல் வாய்சாலஞ்செய்தால் பக்தனாவானா? சன்மார்க்கனாவானா? காமம், வெகுளி, மயக்கமென்னுங் குற்றங்களைக் கடந்தவனன்றோ பக்தன்! சன்மார்க்கன்! அவனன்றோ நம்பத்தக்கவன்! அவன் வீம்பு பாராட்டுவானா? அதிகமாய்க்கொக்கரிப்பானா? பிறரையிகழுவானா? தூஷிப்பானா? இல்லை! இல்லை!! தற்காலம் சன்மார்க்கருக்குச் சங்கையில்லை. ஏனில்லை, உண்மையாம்படி மதிப்புண்டாயினும் மிகுதிப்பற்றானோர் ! துன்மார்க்கரும் துன்மார்க்கருக் கஞ்சுபவருமாதலால், துன்மார்க்கரையே மிகுதிபற்றிச் சங்கைசெய்கிறார்கள், மதிக்கிறார்கள்.

இது உள்ளபடி மதிப்புமல்ல. சங்கையுமல்ல. "எரிகிறவேலைக்குத் நூமைச்சீலையும் எரியும்"என்றாரொருவர்.

ஆதலால், தடல்புடலையல்ல, வாய்ச்சாமார்த்தியத்தையல்ல, பிறரையிகழும் வீரத்தனத்தையல்ல, சன்மார்க்க [illegible] மெய்ச்சுங்கள். அதைப்பின்பற்றுங்கள். நம்புங்கள். போலிவேடதாரிகளையும் புதியவர்களையும் இலகுவில் நம்பாதிருங்கள். நம்பினால் பிற்பாடு துக்கிப்பீர்கள்.

துன்மார்க்கர் குணம் மாறாது. காமிகள் தளர்ந்தகாலத்தும் அவ்வெண்ணத்தைக் கைவிடார். மூர்க்கர் சாதுக்களானபின்னும் சமையாசமையங்களில் தம் பழையகுணங் காட்டுவர். "நன்புலவோராலும் நான்மறைநூல் கற்றாலுந், தன்சந்தஞ்சற்றுந்தவறாது, வன்பூனை, வாய்க்கிசைந்தபோது படித்ததமிழைப் போட்டுக், கிக்கீ எனுமாங் கிளி."

ஆதலால் சிறுவயதுமுதலே சன்மார்க்கப் பயிற்சியுற்ற மகான்களைத்தேடி அவர் சகவாசத்தால் நம்பத்தகும நாமும் சன்மார்க்கராயொழுகப் பிரயாசிப்போமாக.

"படிப்பனை வெளிப்படை"

---

## பித்த சிலேட்டும சுரத்தின குணமும் மருந்தும.

காய்ச்சியிறக்கும் போதுபொரி கையாற்போட்டுப் பின்னிறக்கி, வாயத்தமருந்தை யிப்படியே வகையாய்க்காய்ச்சி எள்ளவுங், கூச்சமறவேகொணடுபின்முற் குடிநீரடைவு கேள்கிளிபோற், பேச்சும்பவளவதரமொடு பிடிபோல்நடையுமுளமயிலே.

உளங்கொள்சீதில் திறிபலையினுடனேவெட்பாலையிலரிசி, குளஞ்சேர்கழுநீற் கிழங்குடனே கூட்டியோரொன் றொருநிறையாய்த், துளங்கஇடித்து நீரிலிட்டுச் சுவறஎரித்தெட்டொன்றாக்கி, இளங்கோகனகமுகமுடையாயெட்டுநாளுமிவைகொள்ளே.

---

## பதார்த்த சாரம்.

### செம்பரத்தை. (சப்பாத்துப்பூமரம்,)

Hibiscur Rosa Sinensis.

இதன் இலையாற் கரப்பன், சொறி மாறும், பூவால் மேகவெள்ளை, பிரமியம், பெரும்பாடு, கை கால் தலையெரிவு, சுரம் இவை நீக்கும். இதன் பூவிதளிற் பிளிந்தசாற்றை கடுதாசியிற் பூசினால் நீலச்சிவப்பு நிறங்கொடுக்கும். இப்படி எத்தனப்படுத்திய காகிதத்தில் கொஞ்சக்காலத்தின்பின் திராவகமும் செயல் செய்யாது.

### செம்பிசின்.

இது ஓர் மரப்பிசின் வயிற்றுக்கழிச்சல், கடுப்பு, மேகவெள்ளை, அனல், சுரம், தேகக்கொதி இவைநீங்கும். மேகவெள்ளைக்கு இதிலொருபங்கைப் பத்துப்பங்கு தண்ணீருடன் சேர்த்துப் பீச்சாங்குழல்வழியாய் உட்செலுத்தினால் நல்லது.

### செம்பு. (தாம்பிரம்.)

Copper.

இது பஞ்சலோகங்களுளொன்று. இதைச் செந்தூரமாக்கிச் சுதேசவைத்தியர் உபயோகிக்கிறார்கள். இச்செந்தூரத்தால் குன்மம், வாயு, உதிரத்திரட்சி, பெருவயிறு, நீர்க்கோவை, நீராமை, சூலை தீரும். தாதுபுஷ்டியுண்டாம். இது சுத்தலோகமாயும் விளையும். பெரும்பாலும். கெந்தக முதலியவைகளுடன்சேர்ந்து கற்களாய் விளையும். இதை உருக்கிக கம்பியாய்நீட்டவும் தகடாய் அடிக்கவுங்கூடியது. வெடியுப்புத்திராவகத்தில் கரையும். இதிலிருந்து துரிசு எடுக்கப்படும். அதைப் பின்னேரிடத்தில் காண்க.

---

## கையொப்பவரவு.

Tellipalai.

S. H. T. Taylor Esq. Hd Master 3-00

---

## யாழ்ப்பாணம்.

---

ஊர்ச்சேர்—நன்மழை வருஷித்தது. சிலவிடங்களில் விரைப்பும் நடக்கும்.

---

தமிழ்ப் பிரதானிகளின் கூட்டம்— சென்ற 17 ம் 18 ந்திகதிகளிலே தமிழ்ப் பிரதானிகளின் கூட்டம் நடந்தது. அதற்கு யாழ்ப்பாண மணியகாரனான மெஸ். சீ. கே. ஆறுமுகமும் தென்மிராட்சி மணியகாரனான மெஸ். எம். முத்துக்குமாரசாமியும். நெடுந்தீவு மணியகாரனான ஜே. என். சந்திரசேகரரும், யாழ்ப்பாணப் பழையமணியகாரனான எம். தம்பாபிள்ளை முதலியாரும், மன்னாரிலிருந்து முசலிஅதிகாரம் மெஸ். வீ. விறுகப்பிள்ளையும, முல்லைத்தீவிலிருந்து டிஸ்திறிக்கு முதலியார், மெஸ், தம்பையாவும், மட்டுக்களப்பிலிருந்து மனமுனை வன்னியன் மெஸ. கனகசபையும், போரேறீவுப்பற்று வன்னியன் மெஸ். அழகக்கோனும், மட்டுக்களப்பு வன்னியன் மெஸ். கோணமலையும், திரிகோணமலை வன்னியன் மெஸ். துரையப்பாவும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இக்கூட்டத்திலே பேசி ஆராயப்பட்ட விஷயங்களாவன;

1—மாதிரித்தோட்டங்கள், 2—புகையிலை. செய்கை, 3—வன்னிச்சனக்குடியேற்றம், 4-தீச்செயல்கள், 5—ஆடுமாடுகளின் வளர்ப்பும் மேய்ச்சற் தரையும், 6—காட்டுக்காய்ச்சல், 7—மாட்டுரோகம், 8—இந்துமத கோயிலாதனங்கள், 9—விடுகாலிகளாய்த் திரியும் ஆடு, மாடுகள் ஆதியவைகளே.

---

தேசாதிபதியவர்களின் வருகை—நமது தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாணத்துக்கு 16௳ இரவு பிரத்தியேகமான புகைரதமூலமாய் வந்திறங்கினர். புகைரதமேடையில் அரசாட்சி ஏசன்றர் மெஸ், பிறீமன், சேர். உவில்லியம் துவைனம், லோக்கல்போட் அங்கத்தவர், ஒவ்வொரு உத்தியோகசாலைத் தலைவராகிய பலபிரபுக்களும் எதிர்சென்றழைத்து மேளவாத்தியத்துடனும்தீபங்களுடனும்இராசமாளிகைக்குஅழைத்துச்சென்றனர். 17௳ நிட்சுவேமண்டபத்தை மிகவினோதமாயலங்கரித்து அதற்குத்தேசாதிபதியவர்களையழைத்துப்புகையிலைத்தீர்வையைப் பழையபடியாக்கியதற்காக நன்றியறிதல் பத்திரமொன்று மெஸ், தி. சி சங்கரப்பிள்ளை J. P. அவர்களால் யாழ்ப்பாணத்தவர்க்காய் வாசிக்கப்பட்டது. அதற்குத் தேசாதிபதியவர்கள் மறுமொழியாக தான் தன்கடமையைச் செய்ததேயன்றி அதிகமாய்ச் செய்யவில்லையென்றும், சேர். உவில்லியம் துவையினமே இதற்கு முகாமையாகநின்று யாழ்ப்பாணத்தாருக்காகத் தன்னுடன் பேசியதுமன்றி செய்யவேண்டிய வழிவகைகளையும் தனக்குப் போதித்தனர் என்றும் அவர் யாழ்ப்பாணத்தாரில் தாமும் ஒருவராகவே கருதி ஒவ்வொன்றிலும் யாழ்ப்பாணத்தாருக்கு ஆகவேண்டியதைச் செய்கின்றனர் என்றும் அவருக்கு எல்லாத்துதியும் செலுத்தவேண்டுமென்றும, தற்கால அரசாட்சி ஏசன்றர் மெஸ். பிறீமனுடைய முயற்சியும் புகையிலை விஷயத்தில் குறைந்ததல்லவென்றும் அவரையும்வியந்து, கடைசியில் கௌரவ, கனகசபையவர்களின் பிரயாசங்களையும் அவர் ஊருக்குச்செய்த செய்கின்ற பலநன்மைகளையும் எடுத்துப்பேசினர். புகையிலைக்கு இப்போது தீர்வை பழையபடியாக்கியிருப்பினும் இலங்கைப்புகையிலையை விற்பனவுசெய்ய இந்தியாவைமாத்திரங் காத்திராமல் மறுஇடங்களுக்கும் தக்கமாதிரி உலர்த்தி அனுப்பி விற்பனவுசெய்தல் புத்தி என்றும்கூறினர். பின்னர் வாணவிளையாட்டுகளும் சங்கீதங்களும் நடைபெற்றன. 19௳ காலை 9 மணிவரையில் தேசாதிபதியவர்கள் விசேஷபுகைரதமூலமாய் இரணமடுவைநோக்கிப் பயணமானார். இராத்திரிகுருநாகலில்தங்குவார். இன்றுமிருந்தலை விகாரையைப்பற்றிய யோசனைக்காய்க்கண்டிக்குப்போய் இன்றிரவு கொளும்பைச்சேர்வார்.

---

புகையிலைச்செய்கை—இந்தியஅரசாட்சியார் பிறதேசப் புகையிலைத்தீர்வையை உயர்த்தியிருக்கிறார்கள். ஆயினும் யாழ்ப்பாணப்புகையிலை திருவனந்தபுரத்துக்கென்றே பக்குவப்படுத்தப்பட்டமையாலும் அது சுதேசஅரசரின் ஆளுகைக்குட்பட்ட இடமாதலாலும் முன்னறிவிப்பின்மையாலும் பழையபடியே தீர்வைபறவிடவேண்டுமென்று தேசாதிபதியவர்கள் கேட்டகேள்வியைத் தற்காலம் அங்கீகரித்துக்கொண்டாலும் ஓர்காலம்மாற்றவுங்கூடுமென்று நமது தேசாதிபதியவர்கள் அபிப்பிராயப்பட்டு நம்மூர்ப்புகையிலையை வேறிடங்களுக்கும்அனுப்பி விற்பனசெய்யக்கூடியதாய் வேறுமாதிரி உலர்த்தப் பயிலவேண்டுமென்று புத்திசொல்லியிருக்கிறார். அனுராசபுரப் பகுதியிற் கிருஷிகசங்கத்தாராற் செய்கைபண்ணிப் பக்குவப்படுத்தும் புகையிலையைப்போய்ப் பார்க்கும்படி ஏவுகிறார். போய்ப் பார்க்கவிரும்புபவருக்கு இலவசமாய் றெயில்வே திக்கற் கொடுப்போமென்றுந் தெரிவிக்கிறார். ஆதலால் நம்மூர்க் கமக்காரரே கண்மூடிக்கொண்டிருந்துவிட்டுப் பின் கூக்குரலிடாதிருங்கள். மலையாளப்புகையிலையை மட்டாய்ச்செய்யுங்கள்,

---

விழாக்கள்—நம்மூர் உலவிற்குளங்கரைப் பிள்ளையார் கோயிலில் விழாநடந்து இன்றுடன் முடிந்தது. வாணவிளையாட்டு அபரிமிதம் இதைக் காத்திருந்து மழை குழப்பிவிட்டதினல் விடிந்தபின்னரே வாணஞ் சுடப்பட்டது. நல்லூர்க்கந்தசாமி கோயிலிலும் விழா நடக்கிறது. நம்மூருக்கடுத்த சன்னதி விழாவும் இன்றுடன் சமாப்தியாயிற்று.

யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்பிறின்றன்—யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்பிறின்றன் மெஸ். டானியலவர்கள் வேறிடத்திற்கு மாற்றப்படஅவரினிடத்துக்கு மெஸ். தோர்ண்ஹில் நியமிக்கப்படுவாராம். இவர் முன் இங்கு சுப்பிறின்றனாக விருந்தவர்.

---

குறிசுடல்—தற்காலம் மாடுகளுக்குக் குறிசுடுவது மிருகவதைக்கொப்பானதென்று அறிவிக்கப்பட்டமையால் மெல்லிய கம்பியாற் சுடும்படி தேசாதிபதியவர்கள் கற்பித்திருக்கிறாராம்.

---

மலாய்க்கும்மி-(பிரதமபாகம்)—இப்பெயரிய புத்தகமொன்று நம்மச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதன் ஆக்கியோன் முன் மட்டுக்களப்பு விடுதிப்பெண்பாடசாலையினதும் பின் வேம்படி விடுதிப்பெண்பாடசாலையினதும் தலைமைஆசிரியராய்க் கடமைபார்த்துவந்தவரும் தற்போது சிங்கப்பூர்ப்பகுதியிலே அரசாட்சியாரின்கீழ் கிளாக் உத்தியோகம் வகித்திருப்பவருமான மெஸ், ஆர். எஸ். வீ. முத்துத்தம்பியவர்களே. இது தொடுவாய்ப்பகுதியிலிருக்கும் நந்தேசவாலிபரைத் திருத்தும்நோக்கமாகக் குடி சூத்தி கடன் என்னும் முத்தீமைகளைக் கண்டித்து இயற்றப்பட்டிருப்பதால் இதை யாவரும் அங்கீகரித்துப் பொருளுதவி வாங்கி ஆக்கியோனைத் தைரியப்படுத்த வேண்டியது கடனே.

---

ஆயக்குத்தகை—அடுத்துவரும் 1911 ம் வருடத்தின்பொருட்டு தெருக்களிலும் பாலங்களிலுமிருந்து அறவிடும் ஆயக்குத்தகையை விற்பனவுசெய்யவேண்டாமென்று அரசாட்சியார் ஏசன்றர்மாருக்குச்செய்தியனுப்பியிருக்கிறார்களாம். அப்படியானல் மணியைத்திருப்பிவிட்டுக் காசுவாங்குவார்படும் 11 மணிக்குப்போய் ஒருமணிக்கு வந்தாலும் இரட்டைஆயம்வாங்கும் கஷ்டமும் நிவிர்த்தியாகும்போலும்.

---


நீர் அசௌக்கியமாய் இருக்கிறீரா?

எந்தவிதமான வாதையினலாவது உமக்கு அசௌக்கியம் உண்டானபோது, நீர் "நான் தினந்தோறும் ஒரு தடவையாவது கொல்லைக்குப் போய் வருகிறேன?" என்று கேட்டுக்கொள்ளவேண்டும். "இல்லை" என்று ஏற்பட்டால், (இராத்திரி படுக்கைக்குப்போகும் போது) டோன் என்பவருடைய ஜீர்ண மாத்திரைகளில் (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) இரண்டு அல்லது மூன்று நீர் எடுத்துக்கொள்ளும். மறுநாள் காலையில், மலசுத்தி சகஜமாய் ஆகும். சுகமுண்டாகும். மலபந்தம் என்பது என்னவென்றல், மலம் குடலில் தங்கவேண்டிய காலத்திற்கு அதிகமானகாலந் தங்கி, விஷத்தன்மையுள்ள வஸ்துக்களை யுண்டாக்கி விடுவதேயாம். இந்த விதமான மலபந்தத்தினலேயே இந்த உலகத்தில் கணக்கில்லாத ரோகங்கள் பிறக்கின்றன. ஆகையால், கீழே குறித்திருக்கிற ரோகங்கள் பலவும் மலச்சிக்கலினலேயே உண்டாகின்றன என்றுஅறிந்துகொள்ளவேண்டும். பித்தப்பை போகங்கள், பித்தம், பித்தக்காய்ச்சல், அஜீர்ணம், பசிமந்தம், தைர்யவீனம், அசதி, இதயவாதை, தலைச்சுற்றல், தலைநோய், வயிற்றுப்பசம், இரைப்பையிற் புளிப்பு, ஸ்த்ரீகளுக்கு உண்டாகும் ரோகம் முதலானவை. மலபந்தம் நீடித்திருந்தால், இரத்தம் கெட்டுப்போய், தேகசௌக்கியம் கெட்டே போகும். (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) டோன் அவர்கள் ஜீர்ணமாத்திரைகள் மூலிகைகளினலேயே தயாரானவை.

இம்மாத்திரைகள், குடலிலிருந்து மலத்தையும், விஷவாயுவையும் வெளியாக்கி, பித்தப்பையைச் சரிப்படுத்தி, பித்தநீரைத் தாராளமாய்ப் பெருகச்செய்து, தேகத்தைச் சௌக்கியமும் அழகுமுள்ளதாக்கும். இம்மாத்திரைகள் புருஷர் ஸ்த்ரீகள் சிறுவர்கள் ஆகிய எல்லாருக்குமே சரீரவாதையைச் சீக்கிரத்திலே நீக்கிச்சுகம் உண்டாக்கும்.






12 அணு புட்டியளவு.

விலை அணு 4, 8, 12 உள்ள புட்டிகள் வாங்கலாம். 12 அணு புட்டியில் 60 மாத்திரை இருக்கும். 4 அணு புட்டியைவிட 5 பங்கதிகம் இருக்கும்.

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜெண்ட் ஆன டப்பிலியு. எச். ஹல்லர் துரையவரிடத்திலும் கிடைக்கும். [Tam.


கொலை—பருத்தித்துறைக்கணித்தாய் ஒருவன் எல்லைத்தகாரினல் வேறொருவனை அலவாங்கால் தலையிலடித்துக் கொன்றுவிட்டானும்.

---

## இலங்கை

குரூரகிருத்தியம்—மட்டுக்களப்பில் நாவற்குடாவென்னுமூரிலுள்ள தனவந்தரொருவருக்குத் தட்டாளுெருவன் சில நகைகள்செய்ய உடன்பட்டான். தட்டான் தமக்குநட்டஞ்செய்தானென்று நகைசெய்வித்தவர் முறைப்பாடு செய்யப் போலிசர் விருந்தோடுபோய்த் தட்டானைப்பிடித்துக் கட்டியடித்துக் கூரிய ஆயுதங்களால் அவனை ஊறுபடுத்தி மிளகாய்ப் புகையை முகரும்படி அவனுக்குக்கொடுத்தார்களாம். இவையெல்லாம் உண்மையறியும்படி செய்யப்பட்டனவென்று தட்டான்முறைப்பாடுசெய்தான். இவ்வழக்குச் சுப்பிரீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறது.

---

வியாபாரக்கல்வி—இலங்கையிலே வர்த்தகசங்கத்தாரின் மேற்பார்வையில் இராசாங்ககல்லூரியில் வருகிறமீ 1௳ தொடக்கம் ஓர் வியாபாரக் கல்விவகுப்புத் தொடங்கப்படும். மாணவர் 15 வயது பூர்த்தியானவர்களாயிருக்கவேண்டும். சேருபவர்களின்பரீட்சை இம்மாசம் 22 ந்திகதிக்குமுன் நடக்கும். 25 மாணவரே தெரிவுசெய்யப்படுவர். மாசம் 15 ரூபா சம்பளங்கொடுத்துவரவேண்டும், இரண்டு வருடங்கற்றபின் மாசம் 50 ரூபா சம்பளத்துடன் வியாபாரக்கம்பனிகளிலே வேலைகொடுக்கப்படும்.

---

கள்ளநாணயம்—கொழும்பில் ஒருவன் 10 ரூபா கள்ளநோட்டை கலைக்றசாபீசில் மாற்றும்படி சிறுப்பரிடங்கொடுக்கச் சிறுப்பர் அவனைப் பொலிசரிடம் ஒப்புவித்திருக்கிறார்.

---

கொலைகாரன் ஓடிவிட்டானும்—சோதிரிஸ் பொடிசிஞ்ஞோ என்னும் தகப்பனையும் மகனையும் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அண்டிரீஸ் என்பவனை வடகளுத்துறையில் சென்ற வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சாப்பாடு கொடுக்கும்படி அறையைவிட்டு வெளியேகொண்டுவந்ததில் அவன் எப்படியோ தப்பியோடிவிட்டான்.

---

குடிவெறியாற் குத்துங்கொலையும்—பண்டாரவளையைச்சேர்ந்த நயபொடவென்னுந் தோட்டத் துரையின் சயம்பாகி அதிகமாய்க் குடித்து வெறிக்க, தன்கீழிருந்த சயம்பாகியையும் கத்தியாற்குத்திவிட்டு, மண்ணெயை எடுத்து வங்களாவின் உத்திரங்களிலூற்றித் தீக்கொளுத்திவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு தானும் அக்கினிக்கிரையானன். குடிவெறியே! உன்னல் மாண்டவர் பட்டையத்தால் மாண்டவரிலுமதிகமாமே!

---


இலங்கையிற்பிள்ளைகள்.

தேசசுவாத்தியத்தால் பெலவீனப்படுவதால் அனேகவருத்தங்களுக்குள்ளாக நேரிடுகிறது.

இளம்பராயத்தில் அவர்கள் சிறியஎன்புகளையும் தசைகளையும் பெலப்படுத்தக்கூடிய அவுஷதங்களைப் பாவிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஸ்கொற் இமல்ஷன்

பிள்ளைகளின் தசையையும் என்பையும் வளர்க்கிறது.

அது பூரணநிறைவுள்ளது
அதைஅருந்தியவுடனே அதன்பலன்தெரியும்.





எப்பொழுதும் இந்த ஸ்கொற் மீன்பிடிகாரனின் அடப்பமிட்ட, Emulsion' இஸ்சனைப் பார்த்துவாங்குங்கள்

கையால் தொடப்படாது

எல்லாமருந்து வியாபாரிகளிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

SCOTT & BOWNE LTD
MANUFACTURING
CHEMISTS,
ENGLAND LONON

குதால்விளைந்த கொலை— கொட்டக்கொல்லையைச்சேர்ந்த கல்மதுரைத்தோட்டத்தில் ஒரு கூலியாளுக்கும் சில சிங்களத்தச்சர்களுக்கும் குதவிளையாட்டில் கலகமுண்டானதில் குடிவெறியால் சிங்களவர் கூலியாளைப் பலமாய்க்குத்திவிடவே, கூலியாள் உடனே கொட்டக்கொல்லை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகப்பட்டுச் சிகிச்சைசெய்தும் குணமுருது மரணமாயினன். குத்தினவன் ஓடிவிட்டான். துணைக்குநின்ற சிங்களவன் பிடிக்கப்பட்டிருக்கிருன்.

## வர்த்தமானத்திரட்டு.

நீதிபதிகளும் நியாயதுரந்தாரும்—நீதிபதிகளாயுள்ளவர்களிற் சிலர் தங்கள் கோடுகளில் கட்சிக்காரர்களுக்காக வெளிப்பட்டுப்பேசும் நியாயதுரந்தரரை மரியாதையாய் நடத்துகிறது அருமையாகவே யிருந்துவருகிறது. தங்களுக்கு நீதிபதியதிகாரம் இருப்பதைப் பெரிதாக நினைத்து அவர்கள் அம்மாதிரி நடந்துகொள்ளுகிருர்களேயொழியவேறில்லை. வடஇந்தியாவில் டினுஜ்பூரில் ஓர் நியாயதுரந்தரர் நீதிபதிமேல் மானநஷ்ட வழக்கொன்று கொண்டுவந்தார். டிஸ்திரிக்குநீதிபதி எதிர்வாதஞ்செய்து பிரயோசனமில்லையென்று மன்னிப்புக்கடிதமொன்று தாக்கல்செய்தாராம். நியாயதுரந்தரர் வழக்கைவிட்டுவிட்டார். அனவுகடந்தால் அமிர்தமும் நஞ்சுதான்.

புகைரதத்திற் பயங்கரசெயல்— வங்காளப்பகுதியைச்சேர்ந்த சிமால்பூர் என்னும் றெயில்வேஸ்தானத்தில் ஒருவங்காளிப்பெண் தனது மூன்று பிள்ளைகளோடு பெண்கள் வண்டியொன்றிலேறினள். அப்போது பெண்வேஷந்தரித்த ஆடவனொருவனும் அந்தவண்டியிலேறினன். சிறிதுநேரஞ்செல்ல வங்காளிப்பெண் அயர்ந்து நித்திரையானள். அத்தருணம் பெண்வேஷந்தரித்த ஆடவன் வங்காளிப்பெண்ணின் வாயினுள்ளே சீலையைவைத்து அமர்த்தியவுடனே அவள் திடுக்கிட்டெழுந்து பெண்வேஷந்தரித்தோன் கள்வனெனநினைத்து இருவரும் மல்லாடும்போது சத்தமுண்டானதால் பிள்ளைகள்மூவரும நித்திரையினின்றெழ, அவர்கள் மூவரையும் தூக்கி வெளியேயெறிந்துவிட்டு பெண்ணுக்குக் கத்தியாற்குத்தி அவள் மூர்ச்சையடைந்துகிடக்கும்போது அவளணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றிக்கொண்டு வெளியேபோக நினைத்திருந்தான், சிறிதுதூரத்துள்வந்த ஸ்டேசனி லிவனிறங்கும்போது குறிப்பாலறிந்து அடுத்த வண்டியிலிருந்த பொலிஸ சப்பிறின்றன் அவனைப் பிடிக்கும்படி போட்டருக்கு அறிவித்து வண்டியைப் பார்க்கும்போது வங்காளிமாது சோகமுற்றுக்கிடந்தலைக்கண்டு கள்வனைப்பார்த்தற்கிடையில் அவன் போட்டருக்கும் கத்தியாற்குத்திவிட்டு ஓட்டம்பிடிக்க ஒருமைல்தூரத்துள்ளே அவனைப்பிடித்தனர். வங்காளிப்பெண்ணின் மூத்தபுத்திரன் அந்த ஸ்டேசனில் வந்து நின்றமையால் உடனே தன் தாயைத்தூக்கி ஐயகோவென்றுபுலம்பினன். மூன்றுபிள்ளைகளையும் இக்கள்வன் ஏதோ அபாயஞ்செய்துவிட்டானென்றுணர்ந்து ஒருறெயில்வண்டியை வந்தவழியேவிட்டுப் பிள்ளைகளையும் கண்டெடுத்தேற்றி ஸ்டேசனுக்குக்கொண்டுவந்து போட்டரோடு ஆஸ்பத்திரியிற்சேர்த்தனர். ஐந்துபேரும் அபாயநிலையிலிருக்கிருர்களாம். கள்வன் தக்கபாடம்படிபானென நம்புகிறோம்.

இராசதுரோகம்——யப்பானிலுள்ள தலைநகரமாகிய டொக்கியோ பட்டணத்திலே ராசதுரோகவிஷயமாக எழுபேரை மறியற்படுத்தப்பட் டிருக்கிறது. இவ்வேழுபேருள் ஒரு பெணணுமகப்பட்டனளாம்.

பொலிசரின் சாமர்த்தியம்— திருவாங்கூரிலே கொலைபுரிந்த துரோகிகளைப் பிடிக்கத்தெரியாதிருந்த இப்போது பொலிசர் காவியுடையுடன்சென்று எங்குந்தேடி ஒருவனைப் பம்பாயைச்சேர்ந்த மாமாதேவியிலும் மறறவனை வங்காளத்தைச்சேர்ந்த சாம்பியானிலும் பிடித்திருக்கிருர்களாம். இப்பொலீசர் ஆறுமாசம் பெரும் பிரயாசை கொண்டதினுலே தான் அப்பாதகர்கள் அகப்பட்டார்களாம்.

லட்சாதிபதியின் மகன் பட்டினிகிடந்தாலும்—அமரிக்கதேசத்தின் லட்சாதிபதிகளிலொருவரானகனம்.எட்வின்கோல்ட் என்பவரின் 16 வயசுள்ள மகன் பள்ளிக்கூடத்திலிருந்து ஒழித்தோடி 70 மைல் தூரத்துக்குப் பிரயாணஞ்செய்து பட்டினியால்வாடி அழுக்குடையுடன் நியுசிரித்தன்பொலிஸதானத்தில்வந்து தருமங்கேட்டானும். அங்கிருந்து பிதாவிடத்திற்கு அனுப்பப்பட, அவர் மூாதியபள்ளிக்கூடத்திற்கே வலோற்காரமா யனுப்பிவிட்டாராம்.

அரசரின் சத்தியவசனம்—இங்கிலந்து அரசர் முடிசூடுந்தருணத்தில் சொல்லும் சத்தியவசனம் கத்தோலிக்கருக்கு மனவெறுப்புண்டாக்கியமையால் அதைநீக்கிவிடும்படி விண்ணப்பஞ்செய்திருந்தனர். அதற்கு அரசரும் மந்திரிமாரும் சம்மதித்தும், சிலர் மாற்றப்படாதென்று பிடிவாதமாய் நின்றமையால் சனப்பிரதிநிதிகள் சபைக்குக் கொண்டுவரப்பட்டு அதிலும், பிரபுக்கள்சபையிலும் நீக்கிவிடும்படியே தீர்ப்பிடப்பட்டது.

திபேத்தில் கலகம்—திபேத்தில் கலகம் ஆரம்பித்திருப்பதால் அங்கிலேயவர்த்தகசங்கத்தாரைக்காக்க அவசரம் நேரிடும்போது பீரங்கிகளுடன் 2 பட்டாளத்தையனுப்ப இந்தியஅரசாட்சியார் தீர்மானித்திருக்கிருர்கள்.

திருட்டு—விருதுபட்டியில் திருட்டால் பெரும்உபோதையுண்டாகிப் பலவிடங்களிலும் திருட்டுநடந்துகொண்டுவருவதைக் கண்டுபிடிக்கும்படியாக டிவிஷன் பொலிஸ இன்ஸ்பெக்டராவர்களும் கஷ்டம்ஸ்டேசன்ஹவுஸ் ஆபீசரும் ஆக்டிங் சப் இன்ஸபெக்டருமாகிய மிஸ்டர் முத்துசாமிப்பிள்ளையவர்களும் உதவிக்குச் சில பொலிசரோடு கள்ளக்குறவர்கூடிப் பதிவிருக்குமிடங்களைத் திட்டமாயறிந்து கன்னிச்சேரி புத்தூருக்கு மேற்புறம் ஆற்றுக்கரையருகில் நாணல்செடிக் காட்டுமறைவில் கன்னக்கோல்கள், திறப்பு, ஆயுதம் முதலியவைகளுடன் கூடியிருந்தவர்களைப்பிடித்ததில் ஓடிப்போனவர்களைத்தவிரப் பிடிக்கப்பட்ட 7 பேரிடமும் தங்கம் வெள்ளி நகைகளும், வெங்கலபாத்திரங்களுமிருக்கக்கண்டு பிடித்தனர். சென்றவருஷத்திலும் இவ்வருஷத்திலும் களவுபோயிருந்த சொத்துக்களுமகப்பட்டன,

ஆகாயவிமான விபத்து—சென்றமூ 13 உ காலையில் சர்மன்தேசத்தைச்சேர்ந்த வான்நதி நிரத்தையடுத்திருக்கும் வெஸற்பீலியாவென்னும்பகுதியிலுள்ள விச்லிங்கன் என்னுமிடத்திலிருந்து உயரக்கிளம்பிய எர்ப்ஸலாக் என்னும் ஆகாயக்கப்பல் அரைமணிநேரம்வரையும் பிரயாணஞ் செய்தபின் அதிகமான உயரத்திலிருந்து தரையில்விழுந்துவெடித்துப்போயிற்று. அக்கப்பலிலிருந்த ஹெர்வுஸ் கார் எர்ப்ஸலாப் என்பவரும் அவருடைய நாலு வேலைகாரரும் கீழேவிழுந்து உயிர்துறந்தனர். கப்பலும் முற்றிலும் சேதமானது.

சோடாவாவி—யுகண்டா தேசத்தில் 3009 அடி ஆழமான ஓரிடத்தில் சோடாவூற்று வாவியொன்றிருக்கின்றன. 'மக்டி' என்பதுஅதன்பேர். அவ்வாவி 10 மைல் நீளமும் 3 மைல் அகலமுமுடையது. அவ்விடத்தில் துட்டமிருகங்களிருத்தலினுல் மனிதர் கிட்டப்போகாது விலகிநிற்கின்றுர்களாம்.

மகமதியரின் தறுகுறும்பு—பம்பாய்மாகாணத்துக்கு வடக்கேயுள்ள சிந்துநாட்டில் ஐதராபாத் தாலுகாவைச்சேர்ந்த ஒருகிராமத்து மகமதியர்கள் அவ்வூர் இந்துக்களை ஒதுக்கிவைத்திருக்கிருர்களென்று சமாசாரமெட்டுகிறது. அந்தக்கிராமத்து மகமதியர்கள் அவ்வூர் இந்துக்களுக்கு எவ்விதமானவேலையும் செய்யக்கூடாதென்றும், மகமதியர்கள் தங்கள் வண்டிகளை இந்துக்களுக்கு உதவக்கூடாதென்றும், மகமதியத் தாதிமார்கள் இந்து ஸ்திரிகளுக்குத் தாதித்தொழில் செய்யக்கூடாதென்றும் கட்டுப்பாடுசெய்துகொண்டிருக்கிருர்களாம். அந்தக் கட்டுப்பாட்டில் சேரமாட்டோமென்று சொன்ன ஒருதட்டானையும் மேளகாரனையும் நன்ருய்ச் சிட்சித்தார்களாம், தட்டானுடையவீட்டைக் கொள்ளையடித்தார்களாம், மேளகாரனைப்பிடித்து நையப்புடைத்துவிட்டார்களாம். அவன் இப்போது ஆஸ்பத்திரியில் கிடக்கிருனும். இந்துக்கள் ஊரையும் சொத்துக்களையும்விட் டோடிவிட்டார்களாம். ஆனுல்அவர்களுக்குத் தங்கள் சாமான்களை யெடுத்துக்கொண்டுபோக வண்டிகள் கிடைக்கவில்லையாம். தக்க செல்வமும் செல்வாக்குமுள்ள ஒரு சமீன்தாரின் ஏவுதலினுல் இவ்வளவு தொல்லையுண்டானதாய்த் தெரிகிறது.

பூமிகுமுறல்—கடந்தமாசம் 4உ ஸ்பானியாதேசத்தில் செவீல்பட்டணத்துக்கருகில் கந்தாவிஞ என்னும் ஊரில் ஓரிடத்தில் 500 யார் சுற்றளவுக்குள்ளாக இருந்த கற்களெல்லாம் பூமியிலிருந்து பெயர்க்கப்பட்டு ஆகாயத்திலெறியப்பட்டு மீண்டும்கீழே விழுந்தன. அதேசமயத்தில் நிலமட்டத்தின்கீழ் பலமாய்க்குமுறுகிற சத்தம்கேட்கப்பட்டது அவ்விடத்தில் முற்காலத்தில் அக்கினிமலை இருந்தஇடமாம்.

காபூல்அமீரின்கொடுமை—காபூல் அமீர்அரசருக்கு விரோதமாய்ச் சதிசெய்ததாகச் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் அப்துல்கனியை அந்த டாக்டருக்குக் காவலாயிருந்த ஒருசிப்பாய் தனது தேகசௌக்கியத்தின் பொருட்டு மருந்துகேட்டானும். அந்தச் சங்கதி அமீர்காதுக்கெட்டினவுடனே அந்தக் காவற்காரனைப் பீரங்கிவாயில்வைத்துச் சுட்டுவிடும்படி உத்தரவிட்டாராம்.


### மூன்றுமாசந் தவணை.

சாகவேணுமென்று
வைத்தியர்சொல்லிக் கைவிட்டிருக்கவும்
கண்டியிலேவசிக்கிற
**மெஸ் ஈ. ஸ்பேர்மன்ஹியுஸ்என்பவர்**
மிகுந்த இருதயப்பெலவீனத்திலும்
நல்லிரத்தமில்லாமையிலுமிருந்து
**டக்டர் உவில்லியம்ஸ பிங்பில்சாலே**
துணைமூற்றசங்கதி சொல்லுகிறர்.

என்னுடைய இருதயத்தின் நிலைபரம் அவ்வளவு கேடாயிருந்ததினுலே என்பக்கத்திலே போகுமாராவது என் இருதயமடிக்கிற சத்தத்தைக்கேட்பார்கள். ஒருவைத்தியர் ஒருமணித்தியாலசனவாக என்னைச்சோதித்து மூன்றுமாசங்களுக்குமேலே ஜீவிக்கமாட்டாயென்றும், உனக்கு மருந்துசெய்கிறதுவீணென்றும், உனக்குச் சம்பவிக்கவிருப்பதை நீ நல்ல மனதோடே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றுஞ் சொன்னர்." இதைச்சொல்லுகின்ற மெஸ், ஈ. ஸ்பேர்மன் ஹியுஸ்என்பவர் கண்டியிலே பேர்போந்த புஷ்பதோட்டக்காரன். விதைத்தானிய வியாபாரியும் இரட்சணியசேனை உத்தியோகஸ்தருமானவர். மேலும் இவர் சொல்வது:—

ஒன்பதுவருடங்களின்முன்னே எனக்குக் காட்டுக்காய்ச்சல்வந்ததினுலேதான் இரத்தங்கெட்டு இருதயநோயுண்டாயிற்று. மூன்றுமாசத்தாலே என்னுடைய ஆயுள்முடிந்துபோமென்று வைத்தியர்சொல்லிய தீர்வையின்பின் நான் கொழும்புக்குப்போய் அங்கே வைத்தியஞ்செய்வித்து ஒவ்வொருநாளும் உப்புத்தண்ணீரிலே முழுகிக்கொண்டுவந்தேன். இதனுலே எனக்கு ஒருசுயமும்வந்ததில்லை, கடைசியாக மனவெம்பலோடே மறுபடி கண்டிக்குப்போனேன். என்னுடைய சகோதரன் ஒருவர் மலாய்நாட்டைச்சேர்ந்த பீராக்கிலே ஒரு வைத்தியராயிருக்கிருர். அவர் எனக்கு விலைபெற்றமருந்துகள் சிலஅனுப்பியிருந்தார். அவைகளாலும் எனக்கு ஒருசுகமும் வந்ததில்லை.

ஒருநாள் தெருவிலே ஒரு சிறுபுத்தகத்தைக் கண்டெடுத்தேன். அது டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்சாலே நடந்த ஆச்சரிய ஆரோக்கியங்களைக்குறித்துப் பேசுவதாயிருந்தது. அந்தமருந்தினுலான ஆரோக்கியங்களுள் நெஞ்சிடி நல்லிரத்தமில்லாமையான நோய்களுஞ் சொல்லப்பட்டிருந்தது.



மெஸ், ஈ. பியர்மன் ஹியுஸ் ஏ. வி, எஸ். ஈ.
கண்டி இலங்கை.

இந்தப்புத்தகத்திலே சொல்லப்பட்டவைகளைவாசித்து எனக்குள்ள நோயையும் அது குணமாக்குமோ என்பதைச் சோதித்துப்பார்க்க எண்ணினேன். ஒவ்வொருவேளையும் சாப்பாட்டுக்குமேலே ஒவ்வொரு குளிகைபோட்டுச்சாப்பிடத்தொடங்கினேன், எனக்கிருந்த நெஞ்சிடி படிப்படிகுறைந்துகொண்டுபோவதைச் சந்தோஷத்தோடே கண்டேன். மருந்துசாப்பிட்ட நாலாம்நாள் உண்மையாகவே எனக்குத் தைரியமும் முயற்சியும் வந்தமையால் இலங்கையிலே பேர்போந்த வைத்தியராலே மரணத்தீர்வையிடப்பட்டு இக்காலத்துக்குள்ளே இறந்திருக்கவேண்டியநான் எய்ப்பு இளைப்பு ஒன்றுமின்றி ஆறுமைல்தூரம் நடந்தேன்.

இடையிலேவிடாது தொடர்பாக நான் குளிகைகளைச் சாப்பிட்டுக்கொண்டுவந்தமையால் இரவிலே நல்லநித்திரைவந்தது. நல்லபசியுண்டாயிற்று. மீண்டும் என் சீவியசந்தோஷத்தை அனுபவித்தேன். டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்சாலே எனக்கு விரைவிலே உண்டான ஆச்சரிய மாற்றத்தைக்கண்ட என் உறவினரும் சிநேகிதரும் அதிசயப்பட்டார்கள்.

எனக்கு இது சம்பவித்து ஆறுவருடங்கள்சென்றன. அதன்பின் எனக்கு இருதயநோயாவது நல்லிரத்தமில்லாத குணமாவது சிறிதேனும் எனக்குத் தோற்றவில்லை. அது எனக்கு நிலையான ஆரோக்கியமாயிற்று. அப்படியல்லவா? எனக்கு இம்மருந்து கிடைத்திராதிருந்தால் வைத்தியர்களுடைய உத்தேசப்படி நான் எப்பவோ இறந்திருப்பேனென்பதற்குச சந்தேகமில்லை. எனக்குநடந்த ஆச்சரிய ஆரோக்கியத்துக்காக நான் நன்றியுடையவனுயிருக்கிறேன். இந்த விஸ்தாரமான உலகமானது இந்தமருந்தின் சக்தியை நன்ருயறியவேண்டுமென்று விரும்புகிறேன்—என்ருர்.

வெளிறினவர்களுக்காக ஆக்கப்பட்ட டக்டர் உவில்லியம்ஸ உடைய குளிகைகள் அறியப்பட்ட சஞ்சீவி மருந்துகளுள்ளே தலைமையானது. இக்குளிகைகள் இரத்தத்தைச்சுத்தம்பண்ணிச் செழிப்பிக்கின்றன. இரத்தத்தின் மூலமாய் தேகத்தின் சகலபகுதிகளுக்கும் நல்லசுகத்தைக் கொடுக்கின்றன. இதனுற் சொஸ்தம்பெற்ற பலருடைய நற்சாட்சிப்பத்திரங்கள் டக்டர் உவில்லியம்உடைய குளிகைகள் செமியாக்குணத்துக்கும், நரல்நோய்க்கும், தலையிடிக்கும், தோல்வியாதிகளுக்கும், பருக்களுக்கும், புண்களுக்கும், வாதத்துக்கும், திமிர்வாதத்துக்கும், வீக்கத்துக்கும், காய்ச்சலின்பின்வரும்பெறுபேறுகளுக்கும், வயிற்றுளைவுக்கும், குலைப்பன் காய்ச்சலுக்கும், விசேஷமாய் இளவயசுதொடங்கி நடுப்பருவம்மட்டும் பெண்பாலார்படும் வருத்தங்களுக்கும் தக்கமருந்தெனக்கூறுகின்றன. இலங்கையிலே மருந்துவிலைப்படும் சாப்புகளெல்லாவற்றிலும் இம்மருந்தையும் வாங்கலாம், விலை போத்தலொன்று 2 ரூபா. ஆறுபோத்தல் 11 ரூபா.

பயங்கரமான கொலை—சென்ற மீ 7உ காலை 11 மணிக்கு மிர்பூர் பொலீஸதானத்தைச்சேர்ந்த ஜ-சட்டியாட்வூா வென்னுங் கிராமத்திலுள்ள ஒரு காட்டான் பித்தஞ் சிரசிலேறினதினாலேயோ வேறேதுங் காரணத்தினாலேயோ தன் மாதாவையும் தன்மனைவியையும் அவளுடைய கர்ப்பத்தில் சனித்திருந்த சிசுவையும் இரக்கமில்லாமல் கத்திக்கிரையாக்கிப்போட்டானாம். இவன் தன்மனைவியைக் கொன்றபின் அவளுடைய வயிற்றைக்கீறி அவள் கர்ப்பத்திலிருந்த சிசுவையெடுத்துப் பக்கத்திலுள்ள ஆற்றங்கரைக்குக் கொண்டுபோய்ப் புகையிலையை வெட்டுகிறமாதிரிவெட்டினானாம். கொலைகாரனின் சகோதரனும் வேறிருவம் அவ்வாறோரத்தில் அச்சேரம் வேலைசெய்துகொண்டிருந்தார்களாம். அப்போதவர்களிலொருவன் நீ என்னத்தை வெட்டிக்கொண்டிருக்கிறாயென்று கேட்டவுடன் கொலைகாரன் வெறிகொண்டவனைப்போலோடித் தன்னை வினவியவனை ஒருவெட்டாய்வெட்டி யமலோகஞ்சேர்த்தானாம். இதைக்கண்டு மற்றிருவரும் பயந்தோட்டம்பிடித்தார்களாம். இதற்கிடையில் கிராமத்தார்வந்துகூடிக் கொலைபாதகனைப்பிடிக்க முயலவே அவன் கத்தியைஆற்றில் வீசிப்போட்டு ஆற்றில்நின்ற தோணியொன்றில் ஏறினானாம். அப்போது தோணியிலிருந்தவர்கள் அப்பரமசண்டாளனைப் பிடித்துக் காலையுங் கையையுங்கட்டிப் பொலீசர்கையில் ஒப்புக்கொடுத்தார்களாம். வீடுவேய்வதே இவனுக்குத்தொழிலாம். இவன் பைத்தியகாரனாகத் தோன்றவில்லையாம். ஏன் இக்கொலைசெய்தாயென்று கேட்டபோது, அவர்களைக்கொலைசெய்ய எனக்குப்பிரியமாயிருந்தபடியால் அப்படிச் செய்தேனென்று மறுமொழி சொன்னானாம்.

---

## கடிதம்.

ஐயா பத்திராதிப!

ராமநாதபுரம் சில்லாவையடுத்த ஆற்றங்கரையென்று அதி அலங்காரம்பொருந்திய கடலையடுத்தஇடமாகிய இவ்வூரில் எங்கள் பாதுகாவலராகிய அர்ச்சியசிட்ட முடியப்பநாதர் தேவாலயமுண்டு. இந்தக்கோயில் பரதகுல கிறீஸ்தவர்களால் இயற்றப்பட்டது. இந்தக்கோயிலுக்குச்சேர்ந்த கிறீஸ்தவர்கள் மிகச்சொற்பபேர். அவர்கள் கடுகுசிறிது காரம்பெரிதானாற்போலே எல்லாரும் ஒரு மக்கையிலுள்ளவர்களைபோலே இவ்வூருக்கு முகாரியாய் இருப்பவராகிய சம்மாட்டியராகிய மரியை சந்தியாகுப்பிள்ளையின் அரியவிசுவாசமும் பத்தியும் பெரிதாய்விளங்க, பலவிடங்களிலும் யாவராலும் நன்குமதிக்கப்பட்டவரும் நன்கறியப்பட்டவருமாதலால், இவர் வரைழயடிவாரைழயாய்த் தமது அலுவல்களில் மிகவும் ஆவலுடையவராய், எப்போதும் தம்மாற்கூடிய பிரயாசப்பட்டு ஓர் பாடசாலையை இப்போது ஸ்தாபித்துவிட்டார். பிற்பாடு அர்ச். முடியப்பரைச் சிம்மாசனத்தில்வைத்துப் பிரார்த்திக்கவேணுமென்ற அவாவின் விடாமுயற்சியால் இப்போது வேலை நடத்துவிக்கின்றனர். இவர் இவ்வூருக்கு ஓர் நற்குணசீலன். இவர் கைப்பிள்ளைபோல் உதவியாகவும் மிகமுயற்சியாகவும் உதவிசெய்து வருபவராகிய மரியநேவிஸபிள்ளையின் ஆசையானது இவ்வூர்ப்பிள்ளைகளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பத்தி விசுவாசமுள்ள இவரையும் முன்குறிக்கப்பட்ட சம்மாட்டியாரையும் இவ்வூரில் அர்ச. முடியப்பநாதர் இரட்சகரை இரந்து! காப்பாராருவாராக. அன்றியும் எல்லாக்கிறீஸதவர்களும் இதற்குமுகாரியாயிருக்கும் காரியஸதர் மரியசந்தியாப்பிள்ளைக்கு என்றென்றும் உதவிபுரியச் சருவேஸ்பரனிடம் வேண்டிக்கொள்ளுவோமாக.

இங்ஙனம்,

புதுஊர் ஆற்றங்கரைச்சங்கம்.

---

ஷாங்காய்

## சீவியவிமாக்கொம்பனி.

(ஒரு பிரித்தானிய கொம்பனி.)

இக்கொம்பனியின கிளைக்கொம்பனியொன்று கொழும்பிலே சுப்பிரீங்கோட்டுப் பிறக்தர் மெஸ், சாள்ஸ் பீரிஸ், டக்தர் டேவிட் றக்லூட், வர்த்தகர் மெஸ், வயிரமுத்து ஆகிய இவர்களின் நன்மதிகொண்டு அவர்களின் பார்வையின்கீழ் நடைபெறுகிறது.

எந்தவகுப்புச் சுதேசிகளு மேற்றுக்கொள்ளப்படுவார்கள்.

இந்தக் கொம்பனியின் வரும்படி முதல் ஆகியவைகளை எழுதி அறிந்துகொள்ளலாம்

F. R. சந்திரசேகரர்,
யாழ்ப்பாணம் முகாமைக்காரன்
சாம் சொலமன்,
மானேசர்.
கொழும்பு.

---

## நல்ல ஒட்டுமாங் கன்றுகள்.

யாழ்ப்பாணத்திலே பலபல இடங்களிலுமிருந்து நல்லஇனமென்று பலர்மாங்கன்றுகளையொட்டி மனுஷரை அனுப்பிவிற்றுவருகிறார்கள். அவைகளின் நயநட்டங்களை நாமுமகண்டிருந்தாலும் நாம் அவைகளிற்குறைபேற்றுவது அழகல்ல. நம்மிடத்திலிருக்கும் பாகுமா என்ற

மாமரத்தின்கனியை அனேகபிரபுக்களும் உத்தியோகஸ்தரும் உண்டுமகிழ்ந்தும் கேட்டுமகிழ்ந்துமிருக்கிறார்கள். அனேகர் ஒருகன்றொட்டி எடுக்கவேணுமென்று அவாவியும் அனுகூலப்படாதுபோயினர். பலர் கேள்வியினாலும் மனமுற்று இப்போது நான் இதில் அனேக கன்றுகளைஒட்டி விலைக்கு வைத்திருக்கிறேன் கன்றொன்று இனிசுக்கும் ஒட்டுக்குந் தக்கபடி ரூ ன் பின் இரண்டரைரூபாவரையில் விற்கப்படும். விரும்பினோர் பின் விலாசப்படிவந்து பெற்றுக்கொள்ளலாம்.

நவக்கிரி. ச. விஞசித்தம்பி

---

## புத்தகவிளம்பரம்.

| | |
|---|---|
| மாணிக்கவாசகர் சந்திருறை | 1—25 |
| சன்மார்க்கசதகம் | 15 |
| உரிச்சொல்நிகண்டு | 30 |
| பாலவைத்தியம் | 50 |
| நயனவிதி | 25 |
| ஞானத்தச்சன்நாடகம் | 37 |
| திருச்செல்வர்காவியம் | 1-25 |

இன்னும் ஞானசவுந்தரிஅம்மானை, தேவமாதா அம்மானை முதலிய பல அம்மானைவகைகளும். ஞானசவுந்தரிசபா, எஸ்தாக்கியார்டிறாமா, சங்கிலிராசன்டிறாமா முதலிய டிறாமாக்களும், சத்தியவேத அனுசாரம், செபரத்தினம் முதலிய செபப்புஸ்தகங்களும், அந்தோனிக்குட்டி அண்ணாவியார்செய்த பேரின்பக்காதல், திருப்புகழாதிய கீர்த்தனங்களடங்கிய புஸ்தகமும், யருமகீர்த்தனங்களும், வேறு பல புஸ்தகங்களும் இவ்வியந்திரசாலையிற் பெற்றுக்கொள்ளலாம். விலைவிபரம் அடங்கிய புஸ்தகடாப்புக் கேட்போருக்கு அனுப்பப்படும்.

நமது விலாசம்,

அச்சுவேலி யந்திரசாலை மனேஜர்
புத்தூர் யாழ்ப்பாணம்,

## விளம்பரம்.

## உயர்ந்தசிமென்று

சிவத்தச்சிலுவை அடையாளமிடப்பட்டதும், மிகவும்நேர்த்தியானதென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதும், இலங்கை இந்தியா சிங்கப்பூர் முதலியஇடங்களிலே அரசாட்சிக்கட்டிடங்கள் புகைவிதிகளிலே பாவிக்கப்படுவதுமான உயர்ந்த சிமென்று சீர்மையிலிருந்து அழைப்பித்திருக்கிறோம். விலை சகாயம். வந்துபார்க்கவும்.

உவிலலியம் மேதர்அன்சன்

## Jaffna Commercial Corporation Ltd.

யாழ்ப்பாண வியாபாரசமுதாயம்

வங்கிக்கருகிலிருக்கும் எங்கள் புடவைச் சாப்பிலே யாழ்ப்பாணத்துக்கேற்ற பலவிதமான


காரிக்கன், மல், சித்தைச் சீலைகளும்

வடதேசத்திலிருந்தழைப்பிக்கப்பட்ட பெனாரிஸ், கஸ்மீயாச் சேலைகளும் வெள்ளைச் சருகைச்சேலைகளும்,

பலதினுசான பொதுவான சேலைகளும், சருகைச் சால்வைகளும் கம்பிச்சால்வைகளும்

மலிவானவிலைக்கு விற்கப்படும்.

இன்னும்யாழ்ப்பாணத்திற் பாவிப்புக்கேற்ற மாதிரியான



மண்வெட்டிகள், பிக்கான்கள். புற்றுவெட்டிகள், காட்டுக் கத்திகளும் இவ்விடம் விற்பனவுக்கிருக்கின்றன

WM. MATHER
Managing Director

## STEA MERNOTICE.



*Ceylon Steamship Coy: Ltd.*

இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின் கப்பல்கள் பின் வருந்தேதிகளில் காங்கேசந்துறையிலிருந்து கொழும்புக்குப் போகவிருக்கின்றன

பாம்பன்வழியாய்
லேடிமக்கலம் 1910ஆ
ஆவணி மீ 22உ திங்கட்கிழமை
புரட்டாசிமீ 5உ
பரித்தித்துறைவழியாய்
லேடிபிளேக் 1910ஆ
ஆவணிமீ 26உ வெள்ளிக்கிழமை

இக்கப்பல்கள் வழியாய்ச் சாமான்கள் அழைப்பிப்போர் பறிக்கப்பட்டவுடனே விலடி அல்லது தந்திகொடுத்துத் தங்கள் சாமானை ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்

Wm Mather & Son
Agents

---

## விளம்பரம்.

சீதாரி பெருந்தெருவில் 1-ம் குறுக்குத்தெருச் சந்தியில் ஸ்தாபித்திருக்கும் "அலக்சாந்தர்பிறதேஷ்" என்னும்எங்கள்சாப்பில் பலவிதமான காஷ்மீர், குருநாடு முதலியவிடங்களிலுள்ள பட்டுச்சேலைகளும், சால்வைகளும், தலைப்பாகைகளும்,வெல்வெற் ரவுக்கைகளும், சித்தைகளும், குடைமுதலியவைகளும், கம்பளிமுதலியவைகளும், பாத்திரவகைகளும், கண்ணாடிவகை, மைவகைமுதலிய சாய்ப்புச் சாமான்களும், மோகன்புளூற்முதலிய வாத்தியக்கருவிகளும், பில்பில்ஸ் முதலிய மருந்துவகைகளும் மிகச் சகாயமானவிலைக்கு விற்கப்படும்.

**Alexander Brothers. & Co.,**
Jaffna.

---

## Cameron & Company's. Tile Works Travancore
## திருவாங்கூர் ஓடுகள்.

பெலனும், லேசும், நன்றாய வெந்திறமும் மினுக்கமும் வேய்கிறதற்குப்படிமானமும் விலைச்சகாயமுமுள்ளவைகளாய்ஐரோப்பிய "கமறன்" கொம்பேனியாராலே செய்யப்பட்டுவழங்கிவருகிற முதற்றரமானபெரியகொழுக்கிஓடுகள்,தளவரிசைக்கற்கள் பட்டணம்சீதாரி பெரியதெருப் பக்கத்திலே விற்பனவுக்காக அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. இந்தஓடுகளின் விசேஷத்தையும் விலைச்சகாயத்தையும் மிஷனரிமாரும்பிறரும்நன்கறிந்து அதிகபிரியமாகவாங்கிக்கொண்டுவருகிறார்கள்.

ஜே. செருபீம் யாழ்ப்பாண ஏசண்டு.
J. Cherubim, Agents.
Main S ree
Jaffna.

---

## CALICUT TILES.
## கலிக்கற ஓடுகள்.

கலிக்கற்ஓடுகளே மற்றெல்லா ஓடுகளைப்பார்க்கிலும் விசேஷமுள்ளவை என்பது நெடுங்காலமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட காரியம். இவைகள் மிகவும் பெலனுள்ளவைகளும் லேசானவைகளுமன்றி மற்றெல்லாவித ஓடுகளைப்பார்க்கிலும் தண்ணீர் இளுப்பதில் மிகக் குறைவுள்ளவைகளாயுமிருக்கின்றன.

சென்னபட்டினத்திலுள்ள ஓர் பண்டிதரால்செய்யப்பட்ட சோதனையிலும் கலிக்கற் ஓடுகளே விசேஷமுள்ளவைகளாய்க் காணப்பட்டன. அரசாட்சியாரும் தங்கள் கட்டிடங்களிற் கலிக்கற் ஓடுகளே போடுவிக்கின்றனர்.

மலிவான ஓடுகள் தேவைப்படுவோருக்காக முன்னிருந்த முதலாம இரண்டாந்தரங்களைவிட மூன்றாந்தரஓடுகளும் இவ்வருடம்அழைப்பித்திருக்கிறோம் வந்துபார்க்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| விலைவிபரம். | 1-ந்தரம் | ஆயிரம் | 65 | ரூபா |
| | 2-ந்தரம் | ஆயிரம் | 60 | ரூபா |
| | 3-ந்தரம் | ஆயிரம் | 45 | ரூபா |

**Wm. Mather & Sons**
Agents.

---

Printed and published By S. Tambimuttoopillai at his Achuvaly Gnanapragasa Yunthira Office achavaly Puttoor Jaffna